30.01.2025

O.S.No.226/2013

பி.வா.சா.1.திரு.பரமேஷ்வரன் த.பெ. தங்கவேல்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு** விசாரணை

நான் ராஜாகூரில் விவசாயம் செய்து வருகிறேன். பொது குடும்ப சொத்து சுமார் 20 ஏக்கர் விவசாயம் செய்து வருகிறேன். விவசாயம் தவிர எனக்கு வேறு ஏதும் தொழில் தெரியாது. எங்களுக்கு பாத்தியப்பட்ட விவசாய நிலங்கள் ராஜாகூர் கிராமத்தில் உள்ளது என்றால் ராஜாகூர் மற்றும் அதற்கு அடுத்துள்ள கிராமமான சிவலிங்கம் கிராமத்திலும் உள்ளது. நான் நிலம் வாங்கி விற்பனை செய்யும் தரகர் தொழில் செய்து வந்தேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து கள்ளந்திரி 2 வது பிட்டில் உள்ளது. எனது இருப்பிடத்திற்கும் தாவா சொத்திற்கும் சுமார் 25 கிலோமீட்டர் இருக்கும் என்றால் சரியல்ல 11 கி.மீ இருக்கும். தாவா சொத்து எனது இருப்பிடத்தில் இருந்து 25 கி.மீ தள்ளி உள்ளது என்றாலும், இந்த வழக்கிற்காக 11 கிலோமீட்டர் இருப்பதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் விஸ்தீரணம் 1 ஏக்கர் 2 செண்ட் ஆகும். தாவா சொத்தை எனது இருப்பிடத்தில் இருந்து வெளியூர் சென்று நான் விவசாயத்திற்காக வாங்கவில்லை என்றால் சரியல்ல. விவசாயத்திற்காக தான் வாங்கினேன். கள்ளந்திரி கிராமத்தில் வேறு எந்த நிலங்களும் எனக்கு இல்லை என்றால் சரிதான். வாதிகளில் 1 மற்றும் 2 வாதிகளை தெரியும் மற்றவர்களை தெரியாது. இன்று மற்ற வரை மற்ற வாதிகளை நான் பார்த்ததில்லை என்றால் சரிதான். 1, 2 வாதிகளிடம் எந்த தேதியில் எங்கு வைத்து தாவா சொத்தை கிரையம் பேசினேன் என்றால் முடுவார்பட்டியில் உள்ள 1 ம் வாதியின் தோப்பில் வைத்து பேசினேன்.

2. 1 ம் வாதியை எனக்கு அறிமுகபடுத்தி வைத்தவர் யார் என்றால் 1 ம் வாதியை எனக்கு ஏற்கனவே தெரியும். 1 ம் வாதியை முடுவார்பட்டியில் உள்ள மலைசாமி VAO அவர்கள் மூலம் எனக்கு தெரியும். பொது அதிகாரம் ஆவணம் எழுதுவதற்கு 1 வாரத்திற்கு முன்பு 1 ம் வாதியிடம் அவரின் தோப்பில் வைத்து கிரையம் பேசினேன். அப்போது 1, 2 வாதிகளை தவிர வேறு யாருமில்லை. நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் படிக்கவில்லை. எனக்கு எழுதப்படிக்க தெரியாது. தாவா சொத்தை செண்டு எவ்வளவு தொகைக்கு பேசினேன் என்றால் செண்ட் கணக்கில் பேசவில்லை

மொத்தமாக ரூ.97,920 க்கு பேசினேன். நான் பேசி முடித்து முன்பணம் ஏதும் கொடுக்கவில்லை. நான் கிரையம் பேசி முடித்து 1 வாரகாலத்திற்குள் கிரையம் பதிந்து கொள்ள சம்மதம் என தெரிவித்தேன்.

3. தாவா சொத்து சம்மந்தமாக உயில் பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா ஆகியவற்றின் நகலை என்னிடம் கொடுத்தார்கள் நான் பார்த்தேன். அந்த ஆவணங்களை பார்த்து தாவா சொத்து 1 வாதிக்கு பாத்தியப்பட்டது என நான் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். நான் கிரையம் பேசிய தேதியில் எனக்கு பொது அதிகார ஆவணம் எதுவும் வாதி எழுதி கொடுக்கவில்லை என்றால் சரிதான். 1 ம் வாதி பெண்ணாக இருப்பதால் அவரது மகனுக்கு பவர் கொடுப்பதாக என்னிடம் சொன்னார். பவர் பத்திரம் பத்திர அலுவலகத்தில் தான் பதிய வேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். தாவா சொத்து சிட்டப்பட்டி கிராமத்தில் உள்ள தாமரைபட்டி சார்பதிவக அலுவலக உட்பட்டது என்றால் சரிதான்.

4. தாமரைபட்டிக்கு எனது ஊருக்கும் சுமார் 8 கிலோமீட்டர். நான் 8 கிலோமீட்டர் என்று மிகைப்படுத்தி கூறுகிறேன் என்றாலும், தாமரைபட்டிக்கும் எனது ஊருக்கும் சுமார் 2 கிலோமீட்டர் தான் என்றாலும் சரியல்ல. நான் கிரையம் பேசி முடித்த 2 நாட்களில் 1 ம் வாதி 2 ம் வாதிக்கு பொது அதிகார ஆவணம் எழுதி கொடுத்து நாங்கள் பதிவு செய்தோம் என்றால் சரியல்ல. சாட்சி தற்போது பவர் பத்திரம் பதிவு செய்ததற்கும் தனக்கும் சம்மந்தமில்லை என்று கூறுகிறார். நான் கூறியதன் பேரில்தான் 1 ம் வாதி 2 ம் வாதிக்கு பவர் பத்திரம் எழுதி கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் முடுவார்பட்டியில் வைத்து தாவா சொத்தை பொறுத்து செண்ட் 1 க்கு ரூ.25,000/- என கிரையம் பேசி ஒரு வாரகாலத்திற்குள் கிரையம் பதிந்து கொள்வாக உறுதி கூறி அதற்கு 1 ம் வாதி பெண் மகளாக இருப்பதால் கிரையம் பதிவிற்கு அலையவேண்டாம் என்றும் 1 ம் வாதியின் மகன் 2 ம் வாதி பெயருக்கு பொது அதிகார ஆவணம் எழுதி கொடுத்தால் நான் அவரை கூட்டி சென்று கிரையம் பதிந்து கொள்வேன் என்று சொன்னேன் என்றால் சரியல்ல.

5. பவர் பத்திரத்தில் 1 , 2 வாதிகள் மற்றும் அதில் சாட்சி கையெப்பம் இட்டவர்கள் ஆகியோர்களை நான்தான் தாமரைபட்டி சார்பதிவக அலுவலகத்திற்கு அழைத்து வந்து அந்த பவர் பத்திரத்தை பதிவு செய்வதற்கு காரணமாக இருந்தேன் என்றால் சரியல்ல.

சாட்சியிடம் பி.வா.சா.ஆ 2 ஆவணத்தை காண்பித்து எந்த தேதியில் பதிவு செய்யப்பட்டது என்று கேட்டபோது அந்த கிரைய ஆவணம் அவரது பெயரில் 26.10.2009 அன்று பதிவு செய்யப்பட்டது என்று ஆவணத்தை பார்த்து கூறுகிறார். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 2 ஆவணத்தில் உள்ள முத்திரைதாள்கள் அனைத்தும் 26.10.2009 தேதியில் தான் வாங்கினேனா என்றால் ஆவணத்தை பார்த்து சரிதான் என்று சாட்சி கூறுகிறார். பி.வா.சா.ஆ 2 ஆவணத்தை தயார் செய்தது மூவேந்தர் என்ற பத்திர எழுத்தர் என்றால் சரிதான்.

6. பி.வா.சா.ஆ 2 ஆவணம் தயார் செய்யப்பட்டபோது உயில் பத்திர நகல், உழவடை பத்திர நகல் மற்றும் பட்டா நகல் ஆகியவற்றை பத்திர எழுத்தரிடம் கொடுத்தேன். 26.10.2009 க்கு முன்பு 1 ஆண்டுகளுக்குள் தாமரைபட்டி சார்பதிவக அலுவகத்தில் பதிவு செய்தோ அல்லது வேறு சார்பதிவாளர் அலுவகத்தில் பதிவு செய்தோ சொத்து வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 2 ஆவணத்தில் 5 வது தாளாக உள்ள முத்திரை தாள் 22.10.2009 தேதியில் என் பெயரில் வாங்கப்பட்டதாக காணப்படுகிறது என்றால் ஆவணத்தை பார்த்து சரிதான் என்று சாட்சி கூறுகிறார். மேற்படி 5 வது தாளாக உள்ள முத்திரை தாளை சிவகுமார் என்ற முத்திரை விற்பனையாளரிடமிருந்து வாங்கப்பட்டதாக காணப்படுகிறது என்றால் ஆவணத்தை பார்த்து சரிதான் என்று சாட்சி கூறுகிறார்.

7. பி.வா.சா.ஆ 2 ல் 5 ம் பக்க தவிர மற்ற முத்திரை தாள்கள் எல்லாம் யாரிடம் வாங்கப்பட்டதாக காணப்படுகிறது என்றால் பி.வா.சா.ஆ 2 ஆவணத்தை பார்த்து சாட்சி தனக்கு எழுதப்படிக்க தெரியாது என்பதால் யாரிடம் முத்திரைதாள் வாங்கப்பட்டது என்று கூற இயலவில்லை என சாட்சியம் அளிக்கிறார். பி.வா.சா.ஆ 2 ஆவணத்தின் 5 வது பக்க முத்திரை தாள் தவிர மற்ற முத்திரை தாள்கள் எல்லாம் P. கண்ணன் என்ற முத்திரைதாள் விற்பனையாளரிடம் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான் ஆனால் எனக்கு எழுதப்படிக்க தெரியாததால் அதை பற்றி தெரியாது என சாட்சி கூறுகிறார். நான் பி.வா.சா.ஆ 2 கிரைய ஆவணத்திற்கான முத்திரை தாள்களை யாரிடம் வாங்கினேன் என்றால் ஒத்தக்கடையில் உள்ள பத்திர அலுவலக அருகே கண்ணன் என்ற முத்திரை தாள் விற்பனையாளரிடம் வாங்கினேன்.

8. நான் நிலம் வாங்கிவிற்கும் தரகர் என்றாலும், முத்திரைதாள்களை பழைய தேதியில் வாங்கி வைப்பது வழக்கம் என்றாலும், பி.வா.சா.ஆ 2 ல் உள்ள 5 வது பக்கத்தில் மட்டும் உண்மையான கிரைய தொகையை குறிப்பிடாமல் கிரையம் எழுதி கொடுப்பவரின் பார்வைக்கு உண்மை தொகையை மறைத்து பத்திர பதிவு அலுவலக சந்தை மதிப்பான ரூ.97,920/- என பூர்த்தி செய்து மேற்படி சொத்தின் மதிப்பை மோசடியாக காட்டி பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பி.வா.சா.ஆ 2 ஆவணத்தை பதிவு செய்த தேதியில் தாவா சொத்தின் சந்தை மதிப்பு ரூ.97,920/- என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 2 ஆவணம் பத்திர பதிவு அலுவகத்தில் பதிவு செய்யப்பட்டபோது அந்த பத்திரத்தில் சாட்சிகளாகவும், இன்னார் என்று நிருபித்த சாட்சிகளாகவும், யார் வந்தார்கள் என்றால் தங்கமணி, என்ற ஒருவர் வந்தார் மற்றொருவர் எனக்கு ஞாபகமில்லை. தங்கமணி கத்தபட்டியை சார்ந்தவர்.

9. கத்தபட்டி கிராமமும், பத்திர பதிவு அலுவலகம் உள்ள சிட்டபட்டியும் அடுத்தடுத்த ஊர் என்றால் சரிதான். மேற்படி தங்கமணி எனது உறவினர் அல்ல. அவர் பொதுபணித்துறையில் பெரியார் கால்வாய் நீரை திறந்துவிடும் பணியாளர் ஆவார். அவர் தற்போது ஓய்வு பெற்றுவிட்டார். அவர் உயிருடன் உள்ளாரா என்றால் எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ 2 ஆவணம் பதிவு செய்தபோது அன்றைய தினம் காலை சுமார் 12.00 மணி இருக்கும். அன்றைய தேதியில் மேற்சொன்ன பத்திரத்தில் கண்ட சாட்சி தங்கமணி பணியில் விடுப்பு எடுத்து வந்தாரா என்றால் எனக்கு தெரியாது. கிரைய தொகையை பத்திர அலுவகத்திற்கு வெளியே வைத்து 2 ம் வாதியிடம் கொடுத்தேன். அப்போது 1 ம் வாதி அங்கு வரவில்லை. அந்த தொகையை நான் வங்கியில் இருந்து எடுத்து வந்தேனா என்றால் இல்லை. நான் ரொக்கமாக கையில் வைத்திருந்து கொடுத்தேன்.

10. பி.வா.சா.ஆ 2 ஆவணத்தின் மூலபத்திரமாக பத்திர பதிவு அலுவகத்தில் எதை காண்பித்தேன் என்றால் 2 ம் வாதி கொண்டுவந்த பட்டா, உயில், உழவடை பத்திரம் ஆகியவற்றின் புகைப்பட நகல் ஆவணங்களை காண்பித்தேன். மேற்படி புகைப்பட நகல்களை பார்த்து அந்த ஆவணங்கள் போதும் என்று சார்பதிவாளர் பி.வா.சா.ஆ 2 ஆவணத்தை பதிந்து கொண்டார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 2 ஆவணத்தின் பக்கம் 6 ல் சுவாதீனத்தை ஒப்படைத்துவிட்டதாக காணப்படுகிறது என்றால் சாட்சி

ஆவணத்தை பார்த்து சரி என்று கூறுகிறார். அதே போல் பி.வா.சா.ஆ 2 பக்கம் 8 - ல் இதற்கு ஆதரவாக பொது அதிகாரம் அசல் வடக்கு வட்டாட்சியர் வழங்கிய பட்டா, கணினி சிட்டா மற்றும் மூல ஆவணங்கள் ஆகியவற்றை என் கைவசம் கொடுத்ததாக காணப்படுகிறது என்றால் எனக்கு எழுதப்படிக்க தெரியாது என்பதால் அந்த ஆவணத்தை பார்த்து என்னால் சொல்ல முடியவில்லை.

11. நான் அசல் பொது அதிகார ஆவணத்தை நிருபண வாக்குமூலத்துடன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

**(**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறு ஒரு தேதியில் ஒத்தி வைக்கப்படுகிறது**)**